| அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி - குன்னம் | | |
|---|---|---|
| வகுப்பு: 10-ஆ | முக்கோணவியல் | காலம்: 1.30 மணி |

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

6*1=6

| | |
|---|---|
| 1 | ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும் அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3}:1$, எனில் சூரியனைக் காணும் ஏற்றக்கோண அளவானது<br>(1) $45^\circ$ (2) $30^\circ$ (3) $90^\circ$ (4) $60^\circ$ |
| 2 | ஒரு கோபுரத்தின் உயரம் 60 மீ ஆகும். சூரியனை காணும் ஏற்றக்கோணம் $30^\circ$–லிருந்து $45^\circ$ ஆக உயரும்போது கோபுரத்தின் நிழலானது $x$ மீ குறைகிறது எனில், $x$–ன் மதிப்பு<br>(1) 41.92 மீ (2) 43.92 மீ (3) 43 மீ (4) 45.6 மீ |
| 3 | ஓர் ஏரியின் மேலே $h$ மீ உயரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து மேகத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $\beta$. மேக பிம்பத்தின் இறக்கக்கோணம் $45^\circ$ எனில், ஏரியில் இருந்து மேகத்திற்கு உள்ள உயரமானது<br>(1) $\frac{h(1+\tan\beta)}{1-\tan\beta}$ (2) $\frac{h(1-\tan\beta)}{1+\tan\beta}$ (3) $h\tan(45^\circ-\beta)$ (4) இவை ஒன்றும் இல்லை |
| 4 | $\sin\theta+\cos\theta=a$ மற்றும் $\sec\theta+\mathrm{cosec}\theta=b$ எனில் $b(a^2-1)$ –ன் மதிப்பு<br>(1) $2a$ (2) $3a$ (3) 0 (4) $2ab$ |
| 5 | $(1+\tan\theta+\sec\theta)(1+\cot\theta-\mathrm{cosec}\theta)$ –ன் மதிப்பு<br>(1) 0 (2) 1 (3) 2 (4) $-1$ |
| 6 | $a\cot\theta+b\,\mathrm{cosec}\theta=p$ மற்றும் $b\cot\theta+a\,\mathrm{cosec}\theta=q$ எனில் $p^2-q^2$ –ன் மதிப்பு<br>(1) $a^2-b^2$ (2) $b^2-a^2$ (3) $a^2+b^2$ (4) $b-a$ |

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 15 கட்டாய வினா) 7*2=14

| | |
|---|---|
| 7 | எடுத்துக்காட்டு 6.19 ஒரு கோபுரம் தரைக்குச் செங்குத்தாக உள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து தரையில் 48 மீ, தொலைவில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. |
| 8 | $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க. |
| 10 | எடுத்துக்காட்டு 6.26 20 மீ உயரமுள்ள கட்டடத்தின் உச்சியில் ஒரு விளையாட்டு வீரர் அமர்ந்துகொண்டு தரையிலுள்ள ஒரு பந்தை $60^\circ$ இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில், கட்டட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. $(\sqrt{3}=1.732)$ |
| 11 | $50\sqrt{3}$ மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து $30^\circ$ இறக்கக்கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. |
| 12 | எடுத்துக்காட்டு 6.31 12 மீ உயரமுள்ள கட்டிடத்தின் உச்சியிலிருந்து மின்சாரக் கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $60^\circ$ மற்றும் அதன் அடியின் இறக்கக்கோணம் $30^\circ$ எனில், மின்சாரக் கோபுரத்தின் உயரத்தைக் காண்க |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 13 | 13 மீ உயரமுள்ள ஒரு மரத்தின் உச்சியிலிருந்து மற்றொரு மரத்தின் உச்சி மற்றும் அடியின் ஏற்றக்கோணம் மற்றும் இறக்கக்கோணம் முறையே $45^\circ$ மற்றும் $30^\circ$ எனில், இரண்டாவது மரத்தின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3}=1.732$) |
| 15 | 80 மீ உயரமுள்ள மரத்தின் உச்சியில் ஒரு பறவை இருக்கிறது. தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $45^\circ$. பறவை ஒரே உயரத்தில் கிடைமட்டத்தில் பறந்து செல்கிறது. 2 வினாடிகள் கழித்து அதே புள்ளியிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், பறவை பறக்கும் வேகத்தினைக் காண்க. ($\sqrt{3}=1.732$) |
| 16 | 60 மீ உயரமுள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து செங்குத்தாக உள்ள ஒரு விளக்குக் கம்பத்தின் உச்சி மற்றும் அடியின் இறக்கக்கோணங்கள் முறையே $38^\circ$ மற்றும் $60^\circ$ எனில், விளக்குக் கம்பத்தின் உயரத்தைக் காண்க. ($\tan 38^\circ = 0.7813$, $\sqrt{3}=1.732$) |

III. எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 24 கட்டாய வினா) 6*5=30

| | |
|---|---|
| 17 | கலங்கரை விளக்கம் இருக்கும் இடத்திலிருந்து கடலில் எதிரெதிர் திசையில் இரு கப்பல்கள் பயணம் செய்கின்றன. கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து இரு கப்பல்களின் இறக்கக்கோணங்கள் முறையே $60^\circ$ மற்றும் $45^\circ$. கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவு $200\left(\frac{\sqrt{3}+1}{\sqrt{3}}\right)$ மீ எனில், கலங்கரை விளக்கத்தின் உயரம் காண்க. |
| 18 | எடுத்துக்காட்டு 6.33 ஒரு தெருவில் உள்ள ஒரு வீட்டின் சன்னலிலிருந்து, (சன்னல் தரைக்கு மேல் $h$ மீ உயரத்தில் உள்ளது) தெருவின் எதிர்ப் பக்கத்தில் உள்ள மற்றொரு வீட்டின் உச்சி, அடி ஆகியவற்றின் ஏற்றக்கோணம், இறக்கக்கோணம் முறையே $\theta_1$ மற்றும் $\theta_2$ எனில், எதிர்ப்பக்கத்தில் அமைந்த வீட்டின் உயரம் $h\left(1+\frac{\cot\theta_2}{\cot\theta_1}\right)$ என நிரூபிக்க. |
| 19 | ஒரு கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து எதிரெதிர் பக்கங்களில் உள்ள இரண்டு கப்பல்கள் $30^\circ$ மற்றும் $60^\circ$ இறக்கக்கோணத்தில் பார்க்கப்படுகின்றன. கலங்கரை விளக்கத்தின் உயரம் $h$ மீ. இரு கப்பல்கள் மற்றும் கலங்கரை விளக்கத்தின் அடிப்பகுதி ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமைகின்றன எனில், இரண்டு கப்பல்களுக்கு இடைப்பட்ட தொலைவு $\frac{4h}{\sqrt{3}}$ மீ என நிரூபிக்க. |
| 20 | எடுத்துக்காட்டு 6.30 ஒருவர், கோபுரத்திலிருந்து விலகி கடலில் சென்று கொண்டிருக்கும் படகு ஒன்றை, கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்க்கிறார். கோபுரத்தின் அடியிலிருந்து 200 மீ தொலைவில் படகு இருக்கும்போது, படகை அவர் $60^\circ$ இறக்கக்கோணத்தில் காண்கிறார். 10 வினாடிகள் கழித்து இறக்கக்கோணம் $45^\circ$ ஆக மாறுகிறது எனில், படகு செல்லும் வேகத்தினைத் (கி.மீ/மணியில்) |
| 21 | தரையில் உள்ள ஒரு செங்குத்து கம்பம் 1:9 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்பகுதியைக் காட்டிலும் கீழ்ப்பகுதி குறைவாக உள்ளது. கம்பத்தின் அடியிலிருந்து 25 மீ தொலைவில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து, கம்பத்தின் மேல் பகுதியின் உச்சியின் ஏற்றக்கோணம் அதன் கீழ்ப்பகுதியின் உச்சியின் ஏற்றக் கோணத்தைப்போல இருமடங்காக இருந்தால் கம்பத்தின் உயரம் என்ன? |
| 22 | விமானம் ஒன்று புவிப் பரப்பிற்கு இணையாக 600 மீ உயரத்தில் 175 மீ/வி வேகத்தில் செல்கிறது. புவியின் மீது ஒரு புள்ளியிலிருந்து விமானத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $37^\circ$ ஆகும். அதே புள்ளியிலிருந்து ஏற்றக்கோணம் $53^\circ$-க்கு அதிகரிக்க எவ்வளவு நேரம் தேவைப்படும்? ($\tan 53^\circ = 1.3270$, $\tan 37^\circ = 0.7536$) |
| 23 | உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பின் அடியிலிருந்து அலைபேசி கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $60^\circ$ மற்றும் குடியிருப்பின் உச்சியிலிருந்து கோபுர அடியின் இறக்கக்கோணம் $30^\circ$ ஆகும். அடுக்குமாடி குடியிருப்பின் உயரம் 50 மீ எனில் அலைபேசிக் கோபுரத்தின் உயரத்தைக் காண்க. கதிர்வீச்சுக் கட்டுப்பாடு விதியின்படி அலைபேசிக் கோபுரத்தின் குறைந்தபட்ச உயரம் 120 மீ இருக்க வேண்டும். மேற்கண்ட அலைக்கோபுரம் இந்தக் கட்டுப்பாட்டிற்கு உட்படுகிறதா? |
| 24 | ஏரியின் நீர் மட்டத்திலிருந்து $h$ மீ உயரத்திலுள்ள ஒரு புள்ளியிலிருந்து ஒரு மேகத்தின் ஏற்றக்கோணம் $\theta_1$ மற்றும் ஏரி நீரில் விழும் மேகப் பிம்பத்தின் இறக்கக்கோணம் $\theta_2$ எனில், தரையிலிருந்து மேகத்தின் உயரம் $\frac{h(\tan\theta_1+\tan\theta_2)}{\tan\theta_2-\tan\theta_1}$ என நிரூபிக்கவும் |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com